

# வெள்ளிவிழா மலர்



1990-2015

Reg.No - NEP/PS/KN/121

# றோயல் முன்பள்ளி
# ROYAL PRE SCHOOL



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிவிழா மலர்

## றோயல் முன்பள்ளி

## Royal Pre School

REG. NO :- NEP/PS/KN/121

எண் :- 53

கனகபுரம் - கிளிநொச்சி

T.P : 077 9493003, 077 5508525

Email :- arulselvamk2013@gmail.com

**"சிறார்கள் சமாதானத்தின் சரணாலயங்கள்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிக் கூற்று

வினைத்திறன், சமூக
பொறுப்புள்ள,
ஒழுக்கமான, பார்
எங்கும் போற்றும்
அளவிற்கு மழலைகளை
இவ் முன்பள்ளியினூடாக
வளர்த்தல்.

# தூர நோக்கு

சிறார்களை
சமாதானத்தின்
சரணாலயங்களாக,
சமுதாயத்தின் சிறந்த
அத்திவாரக் கற்களாகச்
செப்பனிடல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றோயல் முன்பள்ளிக் கீதம்

போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம் !!
வாழ்க வளர்க வெல்க என்று போற்றுவோம் !!
வளங்கொளிக்கும் வன்னி நாட்டின்
கிளர்ந்தெழுந்த கிளிநொச்சியில்
பரந்தனிலே பிறந்துயர்ந்த
றோயல் முன்பள்ளி !!
போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம் !!

வாழ்க வளர்க வெல்க என்று போற்றுவோம்!!
தாய் மொழியாம் தமிழுடனே சிங்களத்தோடாங்கிலத்தை
வாய் வழியே முக்கனியாய் ஊட்டவல்ல பள்ளி
காய் கனியக் கண்ணியமாய் பண்பியலைக் காத்த
எங்கள் பள்ளி

சேய்துணியச் செயற்திறனை ஊக்குவித்த பள்ளி
சமூகமுன் வாழ்ந்திடவே கணிதமுடன் சமூகவியல்
என்று பல கலைகளுடன் ஏற்றம் தரும் றோயலை
போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம் !!

வாழ்க வளர்க வெல்க என்று போற்றுவோம் !!
நல்ல தமிழ் சொல்லுகின்ற நாவலராய்
பாவலராய் பல்லுயிரும் போற்றுகின்ற
பண்புடைய ஆசான்கள் !!
கல்வியுடன் கலைத்துறையும்
வீரமுடன் விளையாட்டும் !!
எல்லையில்லா பயன் கொடுத்து
ஏற்றம் தரும் றோயலை
போற்றுவோம் போற்றுவோம் போற்றுவோம் !!!
வாழ்க வளர்க வெல்க என்று போற்றுவோம் !!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!
வானமளர்ந்த தனைத்தும் மளந்திடும்
வண்மொழி வாழியவே !
(வாழ்க)

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
(வாழ்க)

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தருதொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!
(வாழ்க)

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!
(வாழ்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



அமரர்

## குமாரசாமி - கலொக் சண்முகநாதன்

## கணக்காளர்

## ( பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் )

## ஆரம்ப நிறுவுனர்

## ( றோயல் முன்பள்ளி )





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லாசிகள் என்றும்

**" எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்"**

என்ற வள்ளுவன் வாக்குக்கு அமைய இன்று 25ஆம் ஆண்டு விழாக்காணும் றோயல் முன்பள்ளி வன்னி பெருநிலப்பரப்பில் தனக்கென்று ஒரு அத்தியாயம் கொண்டது.

**"இளமையில் கல்வி சிலையில் எழுத்து"** என்பதற்கமைய முன்பள்ளியை நாடிய ஒவ்வொரு குழந்தையும் மிகவும் திறம்பட ஆரம்பக்கல்வி, விளையாட்டு, சுற்றுலா என எல்லா வகையான செயற்பாட்டையும் தன்னகத்தே கொண்ட ஒரு குழந்தையாக வெளிவருகின்றதை பார்க்கின்றபோது மிகவும் சந்தோசமாக அமைகின்றது.

முன்பள்ளி முதல்வர், ஆசிரியர் சமூகத்தின் அர்ப்பணிப்பு நிறைந்த செயற்பாடே இவற்றிற்கு காரணம் கூறுவதும் பொருத்தமானது.

ஆகவே இம் முன்பள்ளியின் செயற்திறன் என்றும் மேம்பட கலைமகள் திருவருளும் எனது நல்லாசிகளும் என்றும் உண்டு.

**" வாழ்க உமது பணி வளர்க கல்விச் செல்வம்"**

சுபம்

**சிவஸ்ரீ.அ.சிவலோகநாதக் குருக்கள்**
ஜெயம் ஐயா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி - குருக்கள்

**"திருச்சிற்றம்பலம்"**

புளியம்பொக்கணை, நாகதம்பிரானை வேண்டி 25ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்திருக்கும் மழலைகளின் கல்விக் கூடமாகிய கனகபுரத்தில் அமைந்திருக்கும் றோயல் முன்பள்ளி வீறுநடை போட்டு வளர்ந்திருப்பது மகிழ்விற்குரியதாகும்.

பள்ளியின் வளாகம், வளாகத்தில் அமைந்திருக்கும் நிழல் தரும் மா மரங்கள். மழலைகளின் விருப்பிற்கு ஏற்ப தம்மை உரு மாற்றி கல்வி கற்பிக்கும் ஆசான்கள், இவையே ஒரு குழந்தையின் மனதில் ஆழமாக பதிபவை. இவை அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற தளமே றோயல் முன்பள்ளி என்பதில் மிகையாகாது.

மழலைகளின் மனதை கவர்ந்து இழுக்கக் கூடிய விளையாட்டு முற்றம், அமைதியான சுற்றுப்புறச் சூழல் இவையே கல்வி பயில்வதற்கு ஏற்ற இடமாகும்.

இம் முன்பள்ளியின் பல நிகழ்வுகளுக்கு செல்வதற்குரிய வாய்ப்புகிடைக்கப் பெற்றன. அதில் எந்த நிகழ்வுகளும் நேர முகாமைத்துவம், ஏற்றத்தாழ்வின்றி மழலைகளை தாயாக தந்தையாக, குருவாக அன்போடு அரவணைத்து சீராட்டுவது இவர்களுக்கு நிகர் இவர்களே.

மேன் மேலும் இனிவரும் காலங்களிலும் றோயல் முன்பள்ளியின் ஆசான்கள் மிளிர, வளர எமது உள்ளம் கனிந்த நல்லாசிகள்

**சிவஸ்ரீ. அமிர்தஸ்ரீ கந்தராஜா குருக்கள்**
நாகதம்பிரான் கோயில்,
புளியம்பொக்கணை.

எந்தன்

எந்தன் பள்ளி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லிபாறா நூல்நிலையம் - அமலமரித்தியாகிகளின் கல்விசார் வள நிலைய இயக்குனரின் ஆசிச் செய்தி

கிளிநொச்சி, கனகபுரத்தில் கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாக இம் மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில், விசேடவிதமாக சிறார்களின் கல்வி வளர்ச்சியில் அளப்பரிய சேவையினை எம் சமூகத்திற்கு அளித்து இருபத்தி ஐந்தாம் ஆண்டுக்குள் தடம் பதிக்கும் **"றோயல் முன்பள்ளி"** சமூகத்திற்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

எமது மண்ணில் நடைபெற்ற பல இடப்பெயர்வுகள், இழப்புக்கள் மத்தியிலும் தனது அளப்பரிய கல்விச் சேவையினை ஆற்றி எம் சமூகத்திலே சிறார்களின், மாணவர்களின் கல்வி மற்றும் முழுமனித ஆளுமை வளர்ச்சிக்கு இவ் முன்பள்ளியானது வித்திட்டது மட்டுமல்லாது சிறார்களின் முன்னேற்றத்திற்காக பல களங்களை அமைத்து நேர்த்தியான சேவையாற்றி வருவது யாராலும் மறுக்கப்பட முடியாததொன்று.

நவீன போக்குகளில் தடுமாறி, வழிதவறிச் செல்லும் எம் மாணவர்களை அவர்களின் சிறுபராயத்திலே அன்போடு அரவணைத்து கல்வியோடு ஒழுக்கமும் கற்பித்து நன்னெறி வாழ்விற்கு வழிநடத்தி செல்லும் அர்ப்பணிப்பு மிக்க அதிபர், ஆசிரியர்களின் சேவை என்றும் பாராட்டத்தக்கது.

சிறியதொரு முன்பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு இன்று இம் மாவட்டத்திலே முன்னணி ஆரம்பப்பாடசாலையாக பயணித்துக் கொண்டிருக்கும் இக்கல்வி நிறுவனமானது மேலும் எம் மக்களுக்கு பல நற்சேவைகளை ஆற்றிட ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்பணி - யே. சேகர்**
அமதி இயக்குனர்,
லிபாறா நூல் நிலையம், அன்னை இல்லம்,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச்செய்தி

குழந்தை முதன்முதலாக வீட்டுச்சூழலை விடுத்து முன்பள்ளியில் கால்தடம் பதிக்கிறான். புதிய சூழல் குழந்தைகளுக்கு ஒருவித பயத்தைக் கொடுத்தாலும் சிறுவர்களுக்கு ஏற்ற விதத்தில் முன்பள்ளிக் கற்றல் நடவடிக்கைகள் அமையப் பெற்றால் சிறிய பட்டாம்பூச்சிகள் மகிழ்ச்சியாக சிறகு விரிக்க ஆரம்பிக்கும்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் முன்பள்ளிச் செயற்பாட்டில் "றோயல் முன்பள்ளி " முக்கிய பணியினை ஆற்றிவருகின்றது. 1990ம் ஆண்டுக் காலப்பகுதியில் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் கணக்காளர் அமரர்.குமாரசாமி கலொக் சண்முகநாதன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளியானது இன்று 25ம் ஆண்டில் கால்பதிக்கின்றமையை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தியினை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1994 ம் ஆண்டின் பின் கனகபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல கல்வி மாண்களின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிறந்த அடித்தளமாக றோயல் முன்பள்ளி அமையப்பெற்றிருப்பது அதன் வளர்ச்சிப் பாதையை சற்றுத் திரும்பிப் பார்த்தால் புலனாகும். இடப்பெயர்வின் பின் காலத்தின் தேவை கருதி இன்று அனைவரும் மும்மொழிகளில் தேர்ச்சி பெற்றிருப்பது அவசியமாகும். சிறுபராயத்திலே மும்மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தால் போட்டி மிகுந்த உலகிலே எதிர்நீச்சல் போடலாம். அத்தகைய சீரிய பணியினை கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஆற்றி வருகின்றமையையிட்டு முன்பள்ளியின் நிர்வாகத்தினரை இம்மலரூடாக பாராட்டுகின்றேன்.

பள்ளியின் வெள்ளிவிழா சிறப்புற நடைபெறவும், விழாவின் போது வெளியிடப்படும் மலர் சிறந்த ஆவணப்படுத்தலாக அமையவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு.த.குருகுலராசா,
கௌரவ.கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

றோயல் முன்பள்ளியின் வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் உள்ளார்ந்த உவகையடைகின்றேன். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகளுள் காலத்தால் முந்திய மூத்த முன்பள்ளியாக றோயல் முன்பள்ளி விளங்குகின்றது என்று கூறினால் மிகையாகாது. றோயல் முன்பள்ளியானது காலத்திற்குக் காலம் காத்திரமான பணிகளையாற்றி வினைத்திறன் மிக்க மாணவர்களை உருவாக்குவதில் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவது யாவரும் அறிந்த உண்மையாகும். முன்பள்ளிகள் நாற்று மேடைகள் போன்றவை. நாற்று மேடைகளில் முளைகளைப்பதப்படுத்தி பாத்தியில் நடுவதற்கு ஆயத்தமாக்கி கொடுப்பது போலவே பிள்ளைகளின் இயற்கையான செயற்பாடுகளை ஊக்குவித்து வளமாக்கி ஆரம்பக் கல்வியினைப் பெறுவதற்காக பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பதில் முன்பள்ளிகளின் பங்கு இன்றியமையாதது.

இன்று முன்பள்ளிகளின் முக்கியத்துவம் உலகளாவிய ரீதியில் பெரிதும் உணரப்பட்டு இருந்தபோதும் இலங்கைபோன்ற கீழைத்தேய நாடுகளில் முன்பள்ளி ஆசிரியர்களின் வேதனம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் என்பன மேலை நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. இந்த வகையில் மிகவும் குறைந்த வேதனத்துடன் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்துள்ள றோயல் முன்பள்ளி ஆசிரியர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள். **" பிள்ளைகளிற்கு இயற்கையோடு இணைந்த கல்வியை வழங்குங்கள்"** என குழந்தை உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அந்த வகையில் றோயல் முன்பள்ளியின் இயற்கைச் சூழலும் விளையாட்டுப் பூங்காவும் முன்பள்ளிச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள தெய்வச் சிலைகளும் எனது மனதைக் கவர்ந்த அம்சங்களாகும். இம் முன்பள்ளியிலே கல்விச் செயற்பாடுகளை மட்டுமன்றி விளையாட்டு விழா, களப்பயணங்கள், பரிசளிப்புவிழா, சிறுவர்தின விழா போன்ற இணைபாடவிதான செயற்பாடுகளையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவது றோயல் முன்பள்ளிக்கேயுரிய தனித்துவமாகும்.

இடம்பெயர்வுக் காலத்திலும் பின் மீளக்குடியமர்வுக் காலத்திலும் தளராது தனது கல்விப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் றோயல் முன்பள்ளி இயக்குனர், முதன்மை ஆசிரியர், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் முன்பள்ளிச் சமூகத்தினரை மனதாரப் பாராட்டுகின்றேன். றோயல் முன்பள்ளியானது மென்மேலும் சாதனைகளை நிலைநாட்ட எல்லாம் வல்ல ஸ்ரீரங்கநாதப் பெருமாளின் அருள்வேண்டி வாழ்த்துகின்றேன்.



**க. முருகவேல்**
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி ஒளி வீசும் றோயல் முன்பள்ளிக்கு

கற்பித்தல் கற்றல் நிகழ்த்திடவே - நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில்
தினம் பெற்ற கடமையை பேணி ஏற்று
ஞாலம் போற்றும் சமூகத்தை
படைத்து வரும் றோயல் முன்பள்ளியானது

25 ஆவது வயதில் காலடி எடுத்து வைத்துள்ளது என்பது பாராட்டுக்குரியது . கடந்த கால அனர்த்தங்களின் போது பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் சேவையாற்றி வரும் றோயல் முன்பள்ளியை வாழ்த்துவதில் பேருவகை அடைவதோடு

**" ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய் "**

அவ்வண்ணமே இப் பள்ளி ஆசான்கள் தம் மாணவச் செல்வங்களை நல்வழிப்படுத்துவதில் அன்றும், இன்றும் நிறைவோடு செயலாற்றுவதை மிக அருகிலிருந்து பார்த்தவன் நான்.

எதிர்காலத்திலும் மென்மேலும் வளர ஒன்று பட்டு பூரண ஒத்துழைப்புடன் உழைத்து வரும் முதல்வர் ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**திரு .மா. தேவேந்திரன்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்),
மாகாணக் கல்வி அமைச்சு,
வடமாகாணம்.
0770523105





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உதவிக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

றோயல் முன்பள்ளியின் வெள்ளிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். நாட்டுக்குகந்த நல்ல பிரஜைகளை உருவாக்குவது கல்விப்பணியில் ஈடுபடும் அனைவரினதும் தலையாய கடமையாகும். குழந்தைகளே எமது நாட்டின் நிலையான செல்வங்கள். குழந்தை வளர்ச்சியில் முதல் ஐந்து வருடங்களும் மிக முக்கியமான வளர்ச்சிக் கட்டங்களாகும். தாயின் மடிதான் பிள்ளையின் முதற்பாடசாலை. அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை பள்ளி வரும் பிஞ்சுப்பாலகனாய் அவன் தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தில் நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம் என்பதற்கிணங்க முன்பள்ளி ஆசிரியர்கள் குழந்தைகளின் வளர்ப்புப் பெற்றோராக விளங்குகின்றனர். முன்பள்ளியானது குழந்தைகளின் வளர்ப்புத் தாய்மடியாகத் திகழ்கின்றது. அந்தவகையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தலைசிறந்த முன்பள்ளியாக றோயல் முன்பள்ளியாக றோயல் முன்பள்ளி விளங்குவதைக் காண்கின்றோம்.

கடந்த இருபத்தைந்து ஆண்டு காலப்பகுதியில் றோயல் முன்பள்ளி ஆற்றிய கல்விப்பணி அளப்பரியது. கல்வியில் மட்டுமன்றி இணைபாடவிதான செயற்பாடுகளிலும் குழந்தைகளை ஈடுபடுத்தி அவர்களின் ஆளுமை மலர வழி வகுத்த தலைசிறந்த முன்பள்ளியாக றோயல் முன்பள்ளி விளங்குகின்றது. யுத்தக் கொடுமைகளை நித்தம் சுமந்து .... இடம்பெயர்ந்து .... இடம்பெயர்ந்து இன்னல்கள் அடைந்தபோதும் பாரினிலே மிளிர்கின்ற பல்துறை சார்ந்த முத்துக்களை பள்ளி எனும் வயலினிலே அறுவடை செய்வதில் றோயல் முன்பள்ளி ஒரு போதும் சளைத்ததில்லை

எனது பிள்ளைகள் தமது முன்பள்ளிக் கல்வியினை றோயல் முன்பள்ளியில் நிறைவாகப் பெற்றனர் என்பதை உள்ளார்ந்த நன்றியோடு தெரிவிப்பதில் மன நிறைவடைகின்றேன். இயக்குனர் திரு. க. அருள்செல்வம், முதன்மை ஆசிரியர் திருமதி. அனுஷா அருள்செல்வம், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோரின் நிறைவான வழிகாட்டலில் நாட்டுக்குகந்த நல்ல பிரஜைகளை உருவாக்கும் பணி மென்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன். றோயல் முன்பள்ளியானது தனது வெற்றிப்பாதையில் வீறுநடைபோடவும் சாதனைகளை நிலைநாட்டவும் எல்லாம் வல்ல இறையருள் இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

**வாழ்க! றோயல் முன்பள்ளி!**
**வளர்க! அதன் புகழ்!**

**திருமதி. பிறேமா மதுரநாயகம்**
உதவிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

கனகபுரத்தில் இயங்கி வரும் றோயல் முன்பள்ளி தனது 25ஆவது அகவையில் கால் வைக்கும் தருணம் மிகவும் சந்தோசம் தருகிறது. இடர் மிகுந்த பல காலங்களைக் கடந்து சிறப்புடன் இயங்குவதற்கு அதன் நிர்வாகம் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றுகின்றமை பாராட்டுதற்குரியது.

பெற்றோர், மழலைகள் விருப்புக்காட்டும் ஒரு இடமாக றோயல் முன்பள்ளி திகழ்கின்றது. இதற்காக உழைக்கும் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரையும் மனமகிழ்ந்து வாழ்த்துவதோடு மழலைகளுக்கான நலன்களைக் கருத்தில் கொண்டு சமூக நல உணர்வோடு தொடர்ந்து வேலை செய்ய எல்லாம் கடந்த சக்தியை வேண்டி நிற்கின்றேன்.

**செ . விந்தன்**
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
ஆரம்பப்பிள்ளைப் பருவ விருத்தி ,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துச்செய்தி
## ஆண்டவரின் நாமத்தில் வாழ்த்துதல்

றோயல் முன்பள்ளியானது மலரும் மொட்டாக கிளி மாவட்டத்தில் 25ஆம் ஆண்டு நிகழ்வைக் கொண்டாடுவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன், பாராட்டுகின்றேன்.

குழந்தைகளின் விருத்திற்கு நீ இடம்பெயர்ந்த காலங்களிலும் ஸ்கந்தபுரத்திலும் உன் சேவையை நான் அவதானித்தேன் பண்பு விருத்தியில் அன்பாகவும், அன்பு விருத்தியில் ஆசையாகவும் கற்றுக் கொடுப்பதில் கருத்தாகவும், நீ ஆற்றிய பணிகளில் நீ ஒரு முதன்மையான " றோயல்" குடும்பம் என்பதை கிளி மாவட்டத்தில், கிளி கல்வி வலயத்தில் பறைசாற்றிக் கொண்டிருப்பது வாழ்த்துக்குரியது. உடல், உள, சமூக விழுமியத்தில் பெரும் பங்காற்றி வருவதை நான் அறிவேன் உங்கள் சமூகத்தொடர்பு, ஆளுமைமிக்க நிர்வாகத்திறமை குழந்தைகள் வளர்ச்சியில் காணப்படுகின்றது. கிளி வலயத்தில் முத்திரை பதித்திருப்பது மிகச்சிறந்த வாழ்த்துக்குரியதாகும்.

இங்கு கற்கும் சிறார்கள் பொலிவுடன் பவனி வந்து சிரித்த முகத்துடன் ஆடுவது, பாடுவது கற்பது உங்கள் ஆசிரியத்தின் முதன்மை ஊக்கத்தை நான் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

இங்கு, கற்கும் சிறார்கள் ஒதுங்கியிருக்காது எதற்கும் முன் வருகிற தன்மை உடையவர்களாக வளர்ந்திருப்பது பிரதான றோயலை ஞாபகப்படுத்துகிறது.

இவ் வேளையில் இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் மேலும் மேலும் இது போன்ற சமூகப்பணியும் முழுமூச்சுடன் ஈடுபட எல்லாம் வல்ல இறைவன் உங்களை ஒன்று பத்து, நூறாக ஆசீர்வதிப்பாராக! என வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
**சி.சிவநாதன்**
நம்பிக்கையின் வாசல்,
சர்வதேச முன்பள்ளி,
தோணிக்கல், வவுனியா.
முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லதொரு சமூகம் உருவாக......

கிளிநொச்சி றோயல் முன்பள்ளியின் 25 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்திற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். 2000 ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தம் அமுல்படுத்தப்பட்டபோது, பாடசாலையில் தரம் 1 இல், கல்வி கற்க, பிள்ளைகள் வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் என்கின்ற வரையறை கொண்டுவரப்பட்டது. அப்போது புற்றீசல்களாக பல முன்பள்ளிகள் கிளைத்தெழுந்தன. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பணம் சேகரிப்பனவாக, அவற்றில் பல அமைந்தன. அதற்கு முன்னதாக 1990 இலேயே " கல்வியே கருந்தனம்" என்கின்ற அடிப்படையில் அந்த வயதிற்கேற்ற பயிற்சி வழங்கப்பட வேண்டும் என்கின்ற ஒரே சிந்தனையில் எழுந்ததே "றோயல்" முன்பள்ளி. இரண்டாயிரமாம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னதாக இத்தகைய முன் பிள்ளைப்பருவ கல்வி நிலையங்கள் சிலவே காணப்பட்டன. அவற்றிலும் சில, மத நிறுவனங்களால் தொடங்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தன.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன கணக்காளராகப் பணியாற்றிய, சிறந்த ஆங்கில ஆசிரியரான குமாரசாமி கலொக் சண்முகநாதன் அவர்களால் நன்னோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதே இந்த றோயல் முன்பள்ளி. ஓய்வு பெற்ற அதிபரும், சமூக சேவையாளருமான சிறந்த கல்விச் சிந்தனைக்கொண்ட, திரு.கனகரத்தினம் அவர்களையும் நிர்வாகத்தில் உள்ளடக்கி, சிறந்த கல்விப் பின்னணி கொண்ட அவர்களது குடும்ப உறவுகளால், அது தொய்யவிடப்படாது இன்று முன்பள்ளி 25 ஆவது ஆண்டினைச் சிறப்பாகக் கொண்டாடுவது அவர்களது பணிச் சிறப்பினை எடுத்துக்காட்டும் ஒரு செயற்பாடாகும். இதற்கு தெய்வ அனுக்கிரகமும் இருந்தமையாற்றான் சாத்தியமாயிற்று எனலாம். அந்த வகையில் இவ்வாறானதொரு கல்விப்பணி ஆற்றுவது அவர்களது குடும்பத்திற்கு இறைவன் கொடுத்த வரமாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக மிக நெருக்கடியான காலகட்டத்திலும் சிறு பிள்ளைகளது உடல், உள, வளர்ச்சியில் அவர்களது அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியில், ஆளுமை, வளர்ச்சியில் அக்கறை கொண்டு இடப் பெயர்வின் முன்னரும், மீளக்குடியேறிய பின்னரும் அவர்கள் ஆற்றிவரும் கல்விப்பணி அனைவரும் அறிந்ததே. அவர்களது பணி தொடர, பணி சிறக்க பெற்றோரும் மற்றோரும் ஆற்றிவரும் பங்களிப்புத் தொடர வேண்டும்.

தத்தமது பிள்ளைகள் முன்பள்ளிக் கல்வியை நிறைவுசெய்து முறைசார்ந்த பாடசாலைகளில் இணைந்து கொண்டாலும், தொடர்ந்து அந்தமுன்பள்ளிகளில் கற்கும் பிள்ளைகளுக்கு உதவுமுகமாக பழைய மாணவர்களது பெற்றோர் முன்பள்ளிகளுடன் இணைந்திருந்து தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதுடன் பள்ளிச் செயற்பாடுகளில் பங்கெடுக்க வேண்டும். இது வெறுமனே " றோயல்" முன்பள்ளிக்குச் செய்யும் நன்றிக்கடனாகவன்றி, எதிர்கால நற் சமூகத்திற்கு உதவும் பங்களிப்பாகக் கருதிச் செயற்பட வேண்டும் அப்போதுதான் உங்களது பிள்ளைகள் நல்லதொரு சமூகத்தில் வாழ்வது உறுதிப்படுத்தப்படும்.

அன்புடன்

**செ. செல்வராஜா** B.A.PGDE (Merit)S.L.P.S 1
முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

1990 ஆம் ஆண்டு பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன வளாகத்தில் அமரர் கலொக் சண்முகநாதன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்ட இம் முன்பள்ளி 1994 ஆம் ஆண்டு எண் 53 கனகபுரத்திலும், 1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின் போது எண் 91, கந்தபுரத்திலும் 2001 ஆம் ஆண்டு முதல் மீண்டும் எண் 53 கனகபுரத்திலும் இயங்கிவருகின்றது.

இம் முன்பள்ளியில் 3,4,5 வயதுச் சிறுவர்களும் மாலைநேர வகுப்பில் தரம் 01,02,03,04,05 வரையிலான வகுப்புக்களும் நடைபெறுவது யாவரும் அறிந்ததே.

இம் முன்பள்ளியில் கனகபுரம் ஆனந்தநகர், அம்பாள்குளம் ,திருநகர், விநாயகபுரம், செல்வாநகர், புதுமுறிப்பு ஆகிய கிராமங்களிலிருந்து சிறுவர்கள் வருகை தந்து கல்வி கற்று வருகின்றார்கள். இம் முன்பள்ளியின் அதிபர்,ஆசிரியர்கள் எல்லோரின் செயற்பாடு மிகவும் சிறப்பாகவும் தரமாகவுமிருந்து வருகின்றபடியினால் தூரத்தை கருத்தில் எடுக்காது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியையும், ஒழுக்கத்தையும் கருத்தில் கொண்டு பிள்ளைகளை இணைத்து வருகின்றார்கள்.

இம் முன்பள்ளியில் கால்கோல்விழா, சிறுவர்தின விழா, ஆசிரியர் தின விழா, விளையாட்டு விழா, ஆண்டுவிழா என்பன வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் இன மத வேறுபாடின்றி சகல மத குருமார்களையும் ,கல்வியலாளர்களையும் அழைத்து இங்கு நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளச் செய்வது மிகவும் வரவேற்கத்தக்கது.

இம் முன்பள்ளி கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் முன் மாதிரியாகவும் சிறப்பாகவும், தரமானதாகவும் இயங்கி வருவது யாவரும் அறிவர். இம் முன்பள்ளி மேலும் வளர்ச்சியடையவும் சிறுவர்களின் உடல் உள வளர்ச்சிகள் சிறத்தோங்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்வதோடு எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க வளமுடன்

**திரு . அ. கனகரத்தினம்,**
ஓய்வு நிலை அதிபர் சமாதான நீதவான்,
தலைவர் கிராம அபிவிருத்திச்சங்கம், கனகபுரம்.
தலைவர் அ.ஓ.ஊ.ந. நிதியம் கிளி மாவட்டம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**" இன்றைய சிறார்களே நாட்டின் நாளைய தலைவர்கள்"**

இவர்களுடைய ஆளுமைப்பண்புகளையும் ,ஆற்றல்களையும் வளர்த்தெடுத்து ஆரோக்கியமான சமுதாயத்தை கிளிநொச்சி மாவட்டத்திற்கு கையளிக்கின்ற பெரும்பணியைச் செய்துவருகின்ற முன்பள்ளியாக "றோயல் முன்பள்ளி " விளங்குகின்றது.

றோயல் முன்பள்ளி 1990 காலப்பகுதியிலே பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் கணக்காளராகப் பணியாற்றிய அமரர் குமாரசாமி கலொக் சண்முகநாதன் அவர்களினால் பரந்தனிலே ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் ஆரம்பக்கல்வியும் , இடைநிலைக்கல்வியும் இணைந்ததாகவே செயற்பட்டு வந்தது. பின்னர் றோயல் கல்வி நிலையம், றோயல் முன்பள்ளி என பிரிந்து சிறப்புற தன் கல்விப்பணியை ஆற்றி வருகின்றது.

வன்னிச் சிறாரின் கலங்கரை விளக்கமாகத் திகழும் றோயல் முன்பள்ளி கல்வி, கலை , விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் தன்னை அடையாளப்படுத்தி சாதனைகள் பலவற்றை நிலைநாட்டி 25 ஆவது அகவையிலே காலடி பதித்துள்ளது. நாட்டிற்கேற்ற நற்றூண்களை உருவாக்கும் நற்பணி ஆற்றிவரும் றோயல் முன்பள்ளி வளம் பெற என் நல்வாழ்த்துக்களையும் இறைவனின் ஆசிகளையும் வேண்டிநிற்கின்றேன்.

**திருமதி. சுலோஜினி சிவபாலன்**
ஆசிரியர்,
கிளி / கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னுரை

**"சிறார்கள் சமாதானத்தின் சரணாலயங்கள் "**

1990 ஆம் ஆண்டு பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் கணக்காளராக கடமையாற்றிய அமரர் குமாரசாமி கலொக் சண்முகநாதன் அவர்களால் இம் முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

மழலைகளின் எதிர்கால வாழ்வை செவ்வையாக அமைவதற்கு கல்வி எனும் பெருஞ்செல்வத்தினால் மட்டுமே முடியும் எனும் எடுகோளை வைத்து நமது நாட்டின் எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்துவதற்கு திடசங்கற்ப்பம் எடுத்தார். இவருடைய வழிகாட்டுதலின் ஊடாக அவருடைய மகன் திரு சண்முகநாதன் குமார் (முதல்வர் றோயல் கல்வி நிலையம், விளையாட்டு உத்தியோகத்தர் - கிளிநொச்சி) அவர்களினால் நிர்வகிக்கப்பட்டது.

அமரர் சண்முகநாதனின் மகளை 1994 ஆம் ஆண்டு திருமணபந்தத்தில் இணைத்து கொண்டதின் பின்னர் றோயல் முன்பள்ளி தனியாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

யுத்தகால நெருக்கடிகளிலும் கந்தபுரம், பிரமந்தனாறு போன்ற இடங்களில் இம் முன்பள்ளி சிறப்புற இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

வருடாந்தம் மழலைகளின் செயற்பாடுகளாக புதுமுக விழா, கல்விச்சுற்றுலா, மழலைகளின் ஆக்கச் செயற்பாட்டு கண்காட்சி, விளையாட்டு நிகழ்வு, சிறுவர் தினம், ஆசிரியர் தினம், பள்ளி செல்லும் மழலைகளை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு என்பன இடம் பெறுகின்றன. கல்விச்சுற்றுலா பெற்றோர்களுடன் இணைந்த செயற்பாடாக அமைகின்றது.

இவ் வருடம் எமது மாணவர்கள் எமது நாட்டின் தலைநகராகிய கொழும்பிலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இரண்டு நாட்களாக பார்வையிட்டு மகிழ்ச்சிக்கரமாகக்களித்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற வருடங்களில் கண்டி,யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களுக்கு கல்விச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் றோயல் முன்பள்ளி மழலைகள் பிரதேச மட்டத்திலும் மாவட்டங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகளிலும் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுச் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பாண்ட் வாத்திய அணி நடையினை முதன்முதலாக பயிற்றுவித்து பல நிகழ்வுகளில் தமது திறமையினை வெளிப்படுத்திவுள்ளனர்.

காலத்தின் தேவையினைக் கருத்திற்கொண்டு எமது முன்பள்ளியானது மும்மொழிகளிலும் கற்பிக்கப்படுவதோடு மாலைநேரவகுப்புக்கள் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது.

சிறப்பாக எமது முன்பள்ளி வளாகத்தில் கல்வித்தாயின் சிலையினை (சரஸ்வதி) அமைத்துத்தந்த சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீ கந்தராஜா குருக்கள் (நாகதம்பிரான் கோயில் புளியம்பொக்கணை) குடும்பத்தினருக்கும், மாதா சிலையினை அமைத்துத்தந்த திரு. செல்வராசா சுதர்சன் REGIONAL DISTRIBUTION MANAGER, ASIAN ALLIANCE INSURANCE குடும்பத்தினருக்கும் நாம் நன்றியுடையவர்களாகவுள்ளோம்.

இம் முன்பள்ளியின் ஆரம்பகாலம் தொடக்கம் முதன்மை ஆசிரியராக கடமையாற்றிக்கொண்டிருக்கும் , எனது மனைவியுமாகிய திருமதி அருள்செல்வம் அனுசா அவர்களிடம் அத்திவார கல்வியினைப் பெற்று வளர்ந்தவர்கள் இன்று வைத்தியராகவும் , ஆசிரியர்களாகவும் , தாதியாகவும் பல்துறைகளிலும் திகழ்கின்றனர்.

25 வருடகாலம் இம் முன்பள்ளியின் வளர்ச்சிக்கு வித்திட்ட பெற்றோர்கள் , நலன் விரும்பிகள் , ஆசிரியர்கள், கல்வி புலன் சார்ந்த பெரியோர்கள் , அனைவருக்கும் நன்றி கூற கடமைப் பட்டுள்ளோம்.

**" மழலைகளின் வளர்ச்சி**
**றோயலின் உயர்ச்சி "**

அன்புடன்
**திரு.க.அருள்செல்வம்,**
முதல்வர்,
றோயல் முன்பள்ளி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது பாடசாலையும் நானும்

"முத்து முத்தான சித்திரங்கள் – நம்
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை – நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே"

ஆம் எனது பாடசாலைக் கல்வியோடும் எனது தந்தையின் ஆலோசனைப்படியும் செல்வங்களில் சிறந்த செல்வமான கல்விச் செல்வத்தினை வாரி வழங்கும் ஆசிரியத் தொழிலை 1990ஆம் ஆண்டு முதல் இன்று வரை தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றேன்.

எனது அண்ணனின் கல்வி நிலையமான றோயல் கல்வி நிலையத்தில் அவரின் ஆலோசனைகளுக்கும் , பாடசாலையின் விதி முறைகளுக்கும் அமைவாக சேவையினை தொடர்ந்து ஆற்றுகின்றேன்.

**"குழலினிது யாழினது என்பர் தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"**

ஆம் அத்தகைய மழலைகளோடு இணைந்து அவர்களது செயற்திறனை விருத்தி செய்யும் உடல் , உள மேம்பாட்டினை வளர்த்துக் கொள்ளவும், ஆடல் பாடல் விளையாட்டல்ல விளையாட்டிலும் மாணவர்களது சுய செயற்பாட்டின் மூலம் வளர்த்துக் கொள்ளக்கூடிய இடமாக முன்பள்ளி அமைந்துள்ளது.

அந்த வகையில் எமது பாடசாலை வளாகமும் மாணவர்களது விருப்பத்துக்கு ஏற்ற இடமாக மாமரச் சோலையின் மத்தியில் அவர்களது மனதை மகிழ்விக்க கூடிய பூந்தோட்டமும் அதைவிட நல்ல முறையில் அமைக்கப்பட்ட விளையாட்டு முற்றமும் அமையப் பெற்றது எமது பாடசாலைக்கே உரிய தனித்துவமாகும்.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை வளாகத்தினுள் அமையப்பட்ட எமது பாடசாலையானது நாட்டின் இடப்பெயர்வின் மத்தியிலும் தனது சேவையினை இடைவிடாது தொடர்ந்தும் மாணவர்களது நலனில் தொடர உதவியாக இருந்த எனது பெற்றோருக்கும், எனது கணவருக்கும் என்றென்றும் நன்றி கூறுவதோடு நல்ல முறையில் பணியாற்றுவதற்கு எமக்கு தகுந்த பயிற்சியினைத் தந்துதவிய முன்னாள்



பரந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிக் கல்விப் பணிப்பாளர்களான திரு.சி.சிவநாதன் அவர்கள், திரு.செ.செல்வராஜா அவர்கள், திரு. பொன். தில்லைநாதன் அவர்கள் மற்றும் தற்போதைய உதவிக் கல்விப்பணிப்பாளர்களான திரு செ. விந்தன், திருமதி பி. மதுரநாயகம் அவர்களுக்கும் என்றென்றும் நன்றி உணர்வுடன் மேலும் மாணவர்களது நலனில் அக்கறை கொண்ட முதுகெலும்பாகக் திகழ்ந்த சக முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் நன்றிகள்.

தொடர்ந்தும் எமது பாடசாலையின் விருத்திக்கு பல வழிகளிலும் ஒத்தாசையும், ஆலோசனைகளும் வழங்கி வரும் அனைத்து பெற்றோர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் நன்றிகள்.

எம்முடன் இணைந்து பணியாற்றும் சக ஆசிரியர்களின் ஒத்துழைப்பின் மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றது.

எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வியினைப் பயின்று இன்று பல இடங்களிலும் பற்பல துறைகளிலும் வாழ்ந்து வரும் எமது பழைய மாணவர்களுக்கும் எமது நல் வாழ்த்துக்கள்.
அன்புடன்

**திருமதி. அருள்செல்வம் அனுஷா**
SENIOR TEACHER,
DIPLOMA MONTESSORI ALL INDIA,
CERTIFICATE IN PRE SCHOOL EDUCATION,
THE OPEN UNIVERSITY OF SRI LANKA..








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்பள்ளியின் உயர்வுக்கு உழைத்த முதுகெலும்புகளின் ஓர் முதன்மை ஆசிரியை

முன்பள்ளி பிள்ளைகளின் முழுமையான விருத்திக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்ற முன்பள்ளியில் றோயல் முன்பள்ளியும் ஒன்றாகும். அந்த வகையில் ஆசிரியர்களின் திறமைகளும் பெருமையும் வீட்டுச்சூழலிருந்து விலகி முன்பள்ளிச்சூழலுக்கு வரும் சிறார்களை நாட்டின் நல்ல பிரஜையாக உருவாக்குவதற்கு அன்னையைப்போன்று அரவணைத்து நல்ல ஆசானாக கல்வி பயிற்றுவித்து அத்திவாரம் இடுவதற்கு ஊன்று கோலாக விளங்குபவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களே.

ஒரு மனிதன் கல்வியிற் கூடாக எந்த ஒரு உயர்நிலைப் பதவிகளிலும் ஆர்வமுடைய சிறந்த துறைகளிலும் இருப்பதற்கு அவர்கள் முதலில் காலடி எடுத்து வைப்பது முன்பள்ளிக் கல்வியே.

அவர்கள் முதலில் கண்ட ஆசான்களும் முன்பள்ளி ஆசிரியர்களே. அந்த வகையில் இந்த முன்பள்ளியில் கல்வி பயிற்றுவிக்கும் ஆசான்களையும் பாடசாலையையும் வளமுடன் வாழ்க என வாழ்த்துகின்றேன்.

அன்புடன்

**திருமதி தயாபரன் வரலக்சுமி**

சிரேஷ்ட முதன்மை ஆசிரியர்,

சலோம் நகர் முன்பள்ளி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 25ஆவது ஆண்டு வளர்ச்சிப்பாதையில் ........

தனது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட அலங்கரித்து நிற்கும் இவ்வேளை "ஆரம்பவகுப்பு தொடக்கம் நல்லதொரு அடித்தளத்தை ஏற்படுத்தித்தந்த பெருமை றோயலுக்கே சாரும்.

**" எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ் இரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு"**

என அன்று பொய்யா மொழிப் புலவர் வகுத்த மொழிவளமோடு ஒலிக்கும் இடமாக விளங்கியதன் காரணமாக 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் மூலம் பல்கலைக்கழகம் உள் நாடுகளிலும் வெளிநாடுகளிலும் சென்று இளமானி, முதுமானிப் பட்டங்கள் பெற்று அரச திணைக்களங்களில் உயர் பதவிகளில் கடமையாற்றும் அளவிற்கு வளர்ந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

யுத்த நிலை காரணமாக இம் மாவட்டத்தின் சகல அபிவிருத்தி சூழ் நிலை மந்தநிலை ஏற்பட்டும் இந் நிறுவனத்தின் ஆசிரியர்களின் தன்னலமற்ற உழைப்பினாலும், சேவையினாலும் கல்வி அபிவிருத்தி சீரான முன்னேற்றம் கண்டு 25ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதில் நாம் பெருமிதமடைகின்றோம்.

இவ் கல்வி நிறுவனம் இம் மாவட்டத்திலுள்ள மக்களுக்கு தொண்டாற்றவல்லது. தேசப்பற்று, பிரதேசப்பற்று ஆகியவற்றைக் கொண்ட அறிவுபடைத்த மக்களை உருவாக்கி இந்தநாட்டினதும், மாவட்டத்தினதும், கல்வி அபிவிருத்தியில் பெரும் பங்கு ஆற்ற வேண்டு மென விரும்புகின்றோம்.

இவ் கல்வி நிறுவனம் வெள்ளிவிழா கொண்டாடும் வேளையில் அதன் வளர்ச்சிக்கு உழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

அன்புடன்
பழைய மாணவி,
**வைத்தியர்,**
**யசோதை தனபாலசிங்கம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றோயல் முன்பள்ளி
## ROYAL PRE SCHOOL

பதிவு எண் :- NEP/PS/KN/121

எண் 53, கனகபுரம், கிளிநொச்சி.





"மழலைகளின் உயர்ச்சி றோயலின் மகிழ்ச்சி"

## றோயல் முன்பள்ளி
## ROYAL PRE SCHOOL

பதிவு எண் :- NEP/PS/KN/121

எண் 53, கனகபுரம், கிளிநொச்சி.

பள்ளி செல்லும் மழலைகளை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு - 2014






" மழலைகளின் உயர்ச்சி றோயலின் மகிழ்ச்சி "

## றோயல் முன்பள்ளி
## ROYAL PRE SCHOOL

பதிவு எண் : NEP/PS/KN/121

எண் 53, கனகபுரம், கிளிநொச்சி.

பள்ளி செல்லும் மழலைகளை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வு - 2013




"மழலைகளின் உயற்சி றோயலின் மகிழ்ச்சி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# றோயலே நீ

அறிவியலின் கருவூலங்களை அறியாத பருவத்தில் என் அறிவிற்க்கும் அத்திவாரம் இட்டு கல்வி எனும் வாழ்க்கையை ஆரம்பித்து வைத்த றோயல் முன்பள்ளி 25 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்து புதுப் பொலிவுடன் நிமிர்ந்து நிற்கின்றது.

எனக்கு கல்வி எனும் பாலூட்டி வளர்த்து எனது ஆரம்பக்கல்விக்கு அன்னையாக விளங்கியது றோயல் முன்பள்ளி. நான் கல்வி கற்ற 1998 - 2001 ஆகிய வருட காலத்தில் கந்தபுரத்தில் ஓர் அழகான சிறிய பாடசாலையாகக் காணப்பட்டது. தற்போது வளங்கள் பல கொண்டு கிளிநொச்சி மண்ணில் நிமிர்ந்து நிற்கின்றது.

நான் கல்வி கற்ற றோயல் முன்பள்ளி அடைந்துள்ள அடைந்துகொண்டிருக்கின்ற சாதனைகளை நினைத்து பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இப்புகழை கட்டிக் காத்து நல்வழியில் நடாத்திவரும் அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன்
பழைய மாணவன்,
**திரு. முருகேசு - விதுஷன்**
SOFTWARE ENGINEERING
UNIVERSITY OF KELANIYA.

# ஆசிரியையே வாழிய நீவீர்....



பழைய மாணவி
**சேகர் சயந்தனா**
1ம் வருடம் முகாமைத்துவம்,
யாழ் பல்கலைக்கழகம்.

அறியாமை இருளகற்றி அறிவாலே சுடரேற்றி
அகராதி கொண்டே நல்லறிவூட்டினீர்
சிறியோரைச் சினமின்றி சிறகாலே சீராட்டி
முகராசி கொண்டே முடி சூட்டினீர்

சுட்டு விரல் பிடித்து சுறுசுறுப்பாய் கதை கொடுத்து
சுட்டிச் சிறுமி எனக்கு ஏட்டுக் கல்விதனை தொடங்கி வைத்தீர்
பாட்டும் பரதமும் கூத்தும் கதையுமாய் நாளும் பொழுதும்
கேட்டும் படித்தும் கற்றுக் கொடுத்தீர்

ஆண்டுகள் இருபத்து ஐந்து சென்றும் - என்றும்
இளமையுடன் துள்ளி நடைபோட்டு
தோழமையுடன் எம் அறிவுக்கண்ணைத் திறந்த ஆசானே
எக்கரையிருந்தாலும் ஏணியென வாழ்பவரே- உம்மை
எப்பொழுதும் வாழ்கவென மனதாலே வாழ்த்துரைக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்லாசிகள் என்றும் ....

இன்று 25 ஆவது அகவை காணும் றோயல் முன்பள்ளி இதனுடைய புனிதப்பயணம் அதாவது ஆரம்பக்கல்வி மிகவும் முக்கியமானது. மிகவும் சிறிய வயதில் உங்கள் பிள்ளைகளை புத்தி சாதுரியமாக இனங்கண்டு அவர்களுக்கு தகுந்த மாதிரி கல்வி அறிவூட்டும் அற்புதப்பணி இந்த முன்பள்ளிக்குரிய தனிச் சிறப்பு. எனவே வளர்ந்து வரும் சிறார்களுக்கு அவர்கள் எதிர்காலத்தில் சிறந்த கல்வி மான்களாக, புத்திஜீவிகளாக வளர வழி சமைக்கும் றோயல் முன்பள்ளியின் பணி தொடர இறையருளும் எனது நல்லாசிகளும் என்றும் உண்டு.

சுபம்

" சிவத்தமிழ் வித்தகர்
" சிவஞான வாரிதி"
" முத்தமிழ்க் குருமணி"
**அ. ஸ்ரீகாந்தக் குருக்கள்**
ஸ்ரீ வித்தியாபீடம், கிளிநொச்சி.



## றோயல் முன்பள்ளி அன்னையே!வாழ்க!

அறிவு திறன் மனப்பாங்கை அள்ளித்தந்தாய்,
அவனியிலே தலைநிமிர்ந்து வாழவைத்தாய்.
நிறைவான கல்விச்செல்வம் நான் பெறவே
பலமான அடித்தளம் நீ அமைத்துத் தந்தாய்.

அறிவொடு ஆளுமை விருத்தியும் பெற்றிடவே
அழகழகாய் எனை வளர்த்தெடுத்தாய்.
உடல், உள விருத்தி வலுப்பெறவே
உறுதுணையாய் அருகிருந்து வலுச்சேர்த்தாய்.

செந்தமிழோடாங்கிலமும் தித்திக்கும் அழகியலும்
விருப்போடு விளையாட்டுடனிணைந்து பயில வித்திட்டாய்
இன்று நான் இந்நிலை எய்திடவே ஏணியாய்
அமைந்தெனை ஏற்றி வைத்தாய்.

இயற்கை வனப்பும் இங்கிதமான அரவணைப்பும் கொண்ட
உன் தாய்மடியில் நான் தவழ்ந்த நாட்கள்
என்றென்றும் என் வாழ்வின் இனிய நாட்களே!
அன்னையே நீ வாழ்க! அவனியிலே உன் புகழ் வளர்க!



**பழைய மாணவி செல்வி. மதுரநாயகம் ஷானுஜா**
பொறியியற் பீட மாணவி,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளி விழாக்காணும் றோயலே..........

வெள்ளை உள்ளம் கொண்ட
புள்ளினப் பறவைகளாய்
கல்விகற்க வந்தோம் – எம்
முன்பள்ளிக்கு....

பள்ளம் மேடறியா பருவத்துக்
குழந்தைகளாய்
மெல்ல மெல்ல எம்மை மேலே
உயர்ந்திடவே
எம்மை அரவணைத்தனர் எம்மினிய
ஆசான்கள்

மழலை மொழி பேசி
தத்தி நடந்து தவண்டு திரிந்த
எமக்கு "அ" முதல் "ஃ" வரை
கற்றுத் தந்தது இம் முன்பள்ளி

துள்ளித்திரிந்த நம்மை
துலங்கிடும் பல் திறன்களில்
கல்வியுடன் கனிவான விளையாட்டுக்களையும்
சொல்லித் தந்தது எம் முன்பள்ளி

ஒன்றாய் அமர்ந்து உணவருத்தினோம்
குட்டிக் கதை பேசி குதூகலித்தோம்
சிட்டுக்களாய் நாம் திரிந்து
சித்திரமாய் கண் சிமிட்டினோம்

வசந்தங்கள் மலரும் பூஞ்சோலை
கவலைகள் கலையும்
கனவுகள் வளரும்
புனித வளாகம் எம் முன்பள்ளி
இங்கு விதைக்கப்படும்
ஒவ்வொரு விதைகளும்
எதிர்கால விருட்சத்தின்
ஆணிவேர்களே

அன்புடன்
பழைய மாணவன் **திரு. சிவசுப்பிரமணியம் சிவரூபன்**
பழைய மாணவி **செல்வி. சிவரூபன் ரித்திகா**
தொட்டியடி, சங்கானை, யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்னை நெறிப்படுத்திய பள்ளியே

வளம் நிறை வட இலங்கை வன்னி நிலப்பரப்பினில்
விளை நிலப்பூமியாம் கிளிநொச்சி ஊரதன்
பரந்தனில் பிறப்பெய்தி வளர்ந்த நற் பள்ளி
கனகபுரத்தூர்தனில் வெள்ளி விழாக் கண்ட பள்ளி.

தாய் மொழியாம் தமிழுடனே சிங்களத்தோடாங்கிலத்தை
வாய் வழியே முக்கனியாய் ஊட்டவல்ல பள்ளி
காய்கனியக் கண்ணியமாய் பண்பியலைக் காத்த எங்கள் பள்ளி
சேய் துணியச்செயற்திறனை ஊக்குவித்த பள்ளி.

பாரதியின் பாட்டின் பொருட்பக்குவத்தைச் சொல்லி
வள்ளுவனார் வாக்கினிசைக்கொப்ப திகழ் பள்ளி
ஔவையாரின் அறநெறி அரும் பொருளைச் சொல்லி
நாலடியார் நன்நெறிபோல் வாழவைக்கும் பள்ளி.

தன் முலைப்பால் ஊட்டுகின்ற தாய்ப்பசுவைப்போல
தம் பணியை ஈய்கின்ற தாயுமான குருக்கள்
கண்ணிமை போல் கண்ணியத்தைக் காக்க வல்ல காவலர்
புண்ணியராய்ப் பள்ளி பெற்ற முத்தான முதல்வர்

கல்வியுடன் கலை நூறும் விளையாட்டும் விகடமுமாய்
எல்லையின்றி அள்ளித் தருகின்ற ஏகலைவன் முற்றமாம்
றோயல் பள்ளியெனும் திருநாமம் தனைக் கொண்ட
கலைத்தெய்வத் திருச்சந்நிதியை வாயார வாழ்த்திடுவோம்.

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாம் அவன் தன்னந்
தனிமையை போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடும்
எனது அன்னையிடமே நாங்கள்
ஆரம்பக்கல்வியை பெறும் பாக்கியத்தையும்
பெற்ற நாம் அகிலம் போற்றும்
பிள்ளைகளாக மிளிருவோம் எனக் கூறி
வாழ்க எமது தாயின் பணி ........
வளர்க எமது ஆரம்பப்பள்ளி.......





**அருள்செல்வம் - அறிவகன்**
**அருள்செல்வம் - அகநிலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**1998 ஆம் ஆண்டு**
**கந்தபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம்மை மலரவைத்த றோயல் முன்பள்ளி..............

1999ம் ஆண்டு எனது முன்பள்ளி கல்வியை றோயல் முன்பள்ளியில் கற்றேன். சிறந்த ஆசிரியர் குளாத்தின் கற்பித்தலினாலும் வழிநடத்தலினாலும் உயர் கல்வியை றோயல் கல்லூரியிலும் தொடர்ந்து சிறந்த முறையில் உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று இன்று யாழ் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவ பீடத்தில் உயர் கல்வியை தொடர்ந்து கொண்டிருக்கும் நான் எனது வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட ஆசிரியர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் றோயல் முன்பள்ளி தனது சேவையை தொடர்ந்து, சிறந்த கல்வி மான்களை உருவாக்க வேண்டும் என்பதே எனது அவா....!

அன்னையவள் நிழல் பிரிந்து
அறிமுகம் கண்டேன்.....
என் முதல் சொந்தம் றோயல் என
அழியாத கல்வியை
அழகாக போதித்து
என் வளமான வாழ்விற்கு
விளக்கேற்றி வைத்திட்ட - அனுஷா
ஆசானே என்றும் நீ வாழியவே.....!!

றோயல் முன்பள்ளி பழைய மாணவி
**டிலானி- தர்மராஜா**
முகாமைத்துவபீடம்,
2ம் வருடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.



# வாழ்க வளமுடன்........

புதியவற்றை கண்டறிவதும் எதிர்காலத்திற்கு தேவையானவற்றை உருவாக்கித் தருவதும் புதிய சவால்களை எதிர் கொள்ளத் தயார் நிலையில் இருக்கக் கூடிய மாணவர் சமூகத்தின் அடிப்படைக் கல்வியை சீரான முறையில் கொண்டு சென்று 25ஆவது ஆண்டு வெள்ளி விழாக் காணும் றோயல் முன்பள்ளியை வாழ்த்துவதோடு

புதிய தேடல்களில் ஈடுபட்டு தம்மை நாளாந்தம் வளர்த்துக் கொண்டு வினைத்திறன் மிக்க ஆசிரியராக மாணவர்கள் முன்னிலையில் இருப்பதோடு அவர்களின் கல்வி நடவடிக்கையில் அறிவு, திறன் மனப்பாங்கை கருத்திற்கொண்டு அவர்களின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஆசிரியை திருமதி அனுஷா அருள்செல்வம் அவர்களையும் வெள்ளி விழாக்காணும் றோயல் முன்பள்ளியையும் மென் மேலும் வளர்ச்சியடைந்து நல்ல சமூகத்தை உருவாக்க வாழ்த்துகின்றேன்.



றோயல் முன்பள்ளி பழைய மாணவி
**செல்வி சின்னராசா- சுபசிறி**
இல :- 30 ஆனந்தநகர், கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெள்ளிப் பாமாலை

கிளி நகருக்கழகு சேர்க்கும் கனகபுரச் சாலை – அதன்
எளிமையினுக்கினிமை சேர்க்கும் பழமரத்துச் சோலை.
வழி தொடர்ந்து முற்றமெலாம் பச்சை நிறச் சோலை – நடுவில்
விழி குளிரக் காட்சி தரும் பூமரத்துச் சோலை.

பூமணக்கும் சோலையினுள் புள்ளி மான்கள் கூடும் – அவை
நாவினிக்கும் நற்றமிழில் பள்ளிக் கீதம் பாடும்.
பால் மணக்கும் பாலகரின் பாடுமந்தக் கீதம் – பூவில்
தேன் சுவைக்கும் வண்டினத்தின் ரீங்கார நாதம்.

பலநூறு வித்தகரை வித்திட்டு வளர்த்த நிலம் – இது
வரலாறு வாழ்த்துரைக்கும் இளந்தளிர்கள் விளைந்த நிலம்.
தகராறு கண்டிராது புகழோடு உயர்ந்த தளம் – நாளும்
பலவாறு பாடுபட்டுப் பாராட்டைப் பெற்ற களம்.

அருட்செல்வம் அனுசாவின் ஆளுமையைச் சொல்லி – ஆல
விருட்சமென உயர்ந்ததுவே றோயல் முன்பள்ளி.
துரும்பினுக்கும் அவாக்கொள்ளா வளவாளர் வளமொன்றே
அரும்புகளின் கல்வியினுக் கத்திவாரத் தளமொன்றாம்.

வெள்ளிவிழாக் காணுமிந்தப் பள்ளியினைப்பாடி – மகிழ
வந்ததுவே வரமொன்று என் வாசலினைத் தேடி.
அள்ளித் தெளிக்க ஆசை கொண்டு கவித் தமிழை நாடி– என்
சிந்தை மகிழ வாழ்த்துரைத்தேன் வாழ்க ஆண்டு கோடி.

வாழ்க இன்னும் நூறு ஆண்டு கிளியில் இந்தப் பள்ளி
சேர்க புகழ் கோடி றோயல் நாமம் தனைச் சொல்லி.
ஒளிர வேண்டும் வன்னி வானில் விடிவெள்ளியாய் இந்த றோயல்
மிளிர வேண்டும் அதனோடென்றும் சரஸ்வதியின் சாயல்.

நலன் விரும்பி
**எஸ். என். தனேஷ்**
விசுவமடு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்த நாட்கள்.....

கல்வியைப் போதித்தவர்களையும், அவர்களுடன் சேர்ந்து வாழ்ந்த காலங்களையும், அவர்கள் எமக்கு கற்பித்த கல்வியையும் என்றும் மறக்க முடியாது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து என சான்றோர் வாக்கிற்கமைய எமக்கு சிறுபராயத்தில் கற்பித்த ஆசிரியர்களையும் அந்த கல்விச்சாலையையும் மறந்துவிட முடியாது. அக்காலத்தில் எமது பிரதேசத்தில் இயங்கிய மாலை நேர வகுப்புக்களில் றோயல் முன்பள்ளியே மிகவும் காத்திரமான ஆரம்பக்கல்வியினை இப்பிரதேசத்தில் திறம்படக் கற்பித்து வந்தது. அங்கு நானும் ஒரு மாணவனாக கல்வி கற்றேன் என்பதில் மிகவும் மனமகிழ்வு கொள்கின்றேன்.

மேலும் எமக்கு கல்விக்கற்பித்தவர்களில் அனுஷா ஆசிரியரை என்றும் மறந்துவிடமுடியாது நாம் சிறுவர்கள் என்பதால் செய்கின்ற சேட்டைகள் குறும்புகள் என்பனவற்றை சமாளித்து எமக்கு விளங்கக்கூடிய வகையில் கற்பிப்பார். அக்காலத்தில் ஆங்கிலப்பாடத்தினை எமக்கு கற்பித்த ஆசானை என்னால் மறந்துவிடமுடியாது. அவர் பாடங்கள் ஒவ்வொன்றையும் கற்பிக்கும்போது கூறுகின்ற விளக்கம் பசுமரத்தாணி போல் இன்றும் என்மனங்களில் பதிந்து கிடக்கின்றது அவர் தற்பொழுது எம்மத்தியில் இல்லை என்னும்போது மனம் ஏற்கமறுக்கின்றது. றோயல்முன்பள்ளி தற்பொழுது இயங்கும் இடத்தில் முதன்முதல் கொட்டகை அமைத்ததும் அதில் நவராத்திரி நிகழ்வு கொண்டாடியதும் இன்றும் என்மனதில் பசுமையான நினைவுகளாக பொதிந்துகிடக்கின்றன. சிறுவயதினில் நண்பர்களாக சேர்வதும் பிரிவதும் பின் தூரஇடங்களுக்கு செல்வதுமான அமைந்த அக்காலத்தில் நண்பர்களாக இணைந்த நாங்கள் இன்றும் நண்பர்களாகவே வாழ்ந்துவருகின்றோம். (ஸ்ரீ,முரளி,பார்த்தீபன்). நாம் ஒன்றாகக்கூடி கதைக்கின்றபோது சிறுவயதில் இடம்பெற்ற நிகழ்வுகளை கதைக்கின்றபோதெல்லாம் றோயல்முன்பள்ளி காலம் எம்மனதில் வந்துபோகும். 06 ம் தரம்வரை அனுஷா ஆசிரியரிடம் தான் கற்றேன் அவர் இட்டஅடித்தளம் பிற்காலக்கல்விக்கு கைகொடுத்தது எனக்கூறுவது மிகையாகாது.

அன்றுதொட்டு இன்றுவரை பல மாணவர்களை வளர்த்துவரும் றோயல்முன்பள்ளியின் 25ஆம் ஆண்டில் கால்பதிப்பதையிட்டு கல்விகற்ற மாணவன் என்றரீதியில் மகிழ்ச்சி அடைகின்றேன். மேலும் பல நல்ல மாணவர்களை வளர்க்கவேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்.



**வ. ஸ்ரீகுமார்**
வேலைப்பரிசோதகர்,
சமுதாயம் சார் சீர்திருத்தத் திணைக்களம்,
மாவட்ட நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EX99340825x





# என் உள்ளத்திலிருந்து....

றோயல் முன்பள்ளியில் ஆரம்பக் கல்வியைக் கற்ற சிவரூபன் - விஜயந்தி ஆகிய நான் இன்று கண்ணன் முன்பள்ளியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியராக சேவையாற்றி வருகின்றேன்.

ஆரம்பக்கல்வி என்பது ஓர் பிள்ளை தனது வாழ்க்கையில் எடுத்து வைக்கும் முதற்படியாகும் தாயின் மடியில் தவழ்ந்த பிள்ளை அடுத்ததாக தன் குருவை தாயாக நினைத்து மகிழ்வுடன் கல்வி கற்கும் இடமே முன்பள்ளியாகும்.

இவ்வாறான முன்பள்ளிகளில் ஒன்றான றோயல் முன்பள்ளி தனது 25 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைப்பது பாராட்டுக்குரிய விடயமாகும். இப் பாடசாலையில் நானும் கல்வி கற்றேன் என்பதை நினைக்கையில் என் மனம் பூரிப்படைகின்றது.

இம் முன்பள்ளியையும் அதில் கல்வி கற்பிக்கும் ஆசான்களையும் வாழ்த்துவது எமது தலையாய கடமையாகும்.

இதே முன்பள்ளியில் எனது ஆசிரியரிடம் தான் எனது பிள்ளை செல்வி சிவரூபன் - ரித்திகாவும் ஆரம்பக் கல்வியை கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்பு என்னும் நதியில் பிறந்து
ஆர்வம் சிறக்கத் தொண்டாற்றி
இளம் நெஞ்சங்களை குளிரவைத்து
ஈன்றவர் மனதில் மகிழ்ச்சி பொங்க
உள்ளத்தில் உயர்வு கொண்டு
ஊர் போற்றும் ஆசானாகவும்
எங்கள் குல தெய்வம் போல
ஏடுகள் பல கற்றுணர்ந்து
ஐஸ்வர்யங்கள் பல பெற்று
ஒன்றே குலமென நினைத்து
ஓர் வளமான எதிர்காலத்தினை உணர்த்தி
ஔவியம் பேசாது மனதை ஒருநிலைப்படுத்தி
எல்லாம் வல்ல இறைவன் அருள்பெற்று
உங்கள் குருப்பணியை தொடர்வீர்களாக...!
சிறார்களைக் கண்ணும் கருத்துமாகப் போற்றிக் காக்கும்
றோயல் முன்பள்ளியும் என் ஆசான்
அனுஷா ஆசிரியர் அவர்கள் என்றும் வாழ்க வளமுடன்
என்றென்றும் நன்றியோடு.

பழைய மாணவி
**திருமதி சிவரூபன்- விஜயந்தி**
ஆசிரியர்,
கண்ணன் முன்பள்ளி,
தொட்டியடி, சங்கானை, யாழ்ப்பாணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளியின் உயர்வுக்கு உழைத்த முதுகெலும்புகள்



1. திருமதி. தயாபரன் - வரலக்சுமி



2. திருமதி.அருள்செல்வம் - அனுஷா
3. திருமதி.மைக்கல் - ஜெயலக்சுமி



4. திருமதி.கொலின் - கனகேஸ்வரி



5. திருமதி.மகாலிங்கம் - குலபாக்கியம்



6. திருமதி.கிருபானந்தராஜா - ஜெயநிதி



7. திருமதி.உதயச்சந்திரன் - அனுலா



8. திருமதி.சந்திரசேகரம் - விஜயதர்சினி



9. திருமதி.சேகர்லோகன் - றீற்றா



10. திருமதி.புவனேந்திரன் - மேரிதிரேஷா



11. திருமதி.சிவராஜா - கலையரசி



12. திருமதி.யோகராஜா - பிறேமினி



13. திருமதி.அ.மேரிஅன்ரனிற்றா



14. திருமதி.மயில்வாகனம் - விமலேஸ்வரி





15. திருமதி.யோய் குளோரி - சுகந்திகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



16. திருமதி.கணேசன் - புஸ்பராணி

17. திருமதி.ரவிச்சந்திரன் - வனிதா



18. திருமதி.மாணிக்கவாசகர் - பரமேஸ்வரி

19. திருமதி.அ . பிரியதர்சினி



20. திருமதி.மகாலிங்கம் - நித்தியகலா



21. திருமதி.சிறிரங்கன் - யசோதா

22. திருமதி.அன்ரன்ராஜ் - லூர்தம்மா

23. திருமதி.செல்வராசா - ஸ்ரீரஞ்சிதமலர்

24. திருமதி.சசிக்குமார் - சித்திராதேவி

25. திருமதி.சிவகுமார் - சறோஜா

எமது அழைப்பை ஏற்று வருகை தந்து எம்மையும் எமது முன்பள்ளி சமூகத்தினரால் வழங்கிய மதிப்பளிப்பை ஏற்றுக் கொண்டமைக்கு நன்றி கூறுகின்றோம்.

**றோயல் முன்பள்ளி சமூகம்**

**( முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் )**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் 2015

தலைவர் – திரு. கனகரத்தினம் – அருள்செல்வம்
பொருளாளர் – திருமதி.அருள்செல்வம் – அனுஷா
செயலாளர் – திருமதி. சதாசிவம் – ஹேமலதா

உப செயலாளர் – திருமதி. கஜன் – விஜயகுமாரி
ஆலோசகர்கள் – திரு. அப்பாசாமி கனகரத்தினம்
(சமாதான நீதவான்,ஓய்வு நிலை அதிபர், தலைவர் கிராம அபிவிருத்திச்சங்கம், கனகபுரம். தலைவர் அ.ஓ.ஊ.ந. நிதியம் கிளி மாவட்டம்.)
– திரு.சண்முகநாதன் குமார்
(முதல்வர் றோயல் கல்வி நிலையம்,விளையாட்டு உத்தியோகத்தர் – கிளிநொச்சி.)

நிர்வாக உறுப்பினர்கள்

திருமதி – தர்மபாலா ஜெயந்தினி
திருமதி – கணேசமூர்த்தி சுபாஜினி
திருமதி – சுதாகரன் –கௌசிகா
திரு – சண்முகரத்தினம் – ஜெகதீஸ்வரன்
திரு – செல்வராசா – சுதர்ஷன்
திரு – குமாரசாமி – துஷ்யந்தன்
திரு – அழகப்பன் மகேஸ்வரன்

" ஒன்று பட்டால் உண்டு வாழ்வு"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ஆவது வருட கால இம் முன்பள்ளியின்
வளர்ச்சிப்பாதையில் எம்மோடு தோள் நின்று
உழைத்த பெற்றோர்கள், சக ஆசிரியர்கள்
நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள்,
பள்ளி முதல்வர்கள், பள்ளி ஆசிரியர்கள்,
முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
உதவிக்கல்விப் பணிப்பாளர்கள்
வலயக் கல்விப்பணிப்பாளர்கள்
அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த
நன்றிகள்.

**முன்பள்ளி சமூகம்**
**றோயல் முன்பள்ளி**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2014 ஆம் ஆண்டு கல்விச்சுற்றுலா


















2014 ஆம் ஆண்டு கல்விச்சுற்றுலா, பொங்கல் விழா,புதுமுக விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்பள்ளி அபிவிருத்தி ஆண்டினை முன்னிட்டு 2006.07.20 நாள் நடைபெற்ற நிகழ்வுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2013 ஆம் அண்டு விளையாட்டு விழா நிகழ்வின் போது...




2011 ஆம் ஆண்டு விளையாட்டு விழா நிகழ்வின் போது...



2004 ஆம் ஆண்டு அமைத்திருந்த சிறுவர் பூங்கா...



1998 ஆம் ஆண்டு விளையாட்டு விழா நிகழ்வின் போது.. (ஸ்கந்தபுரம்)



2014 விளையாட்டு விழா நிகழ்வின் போது...



2014 விளையாட்டு நிகழ்வு விருந்தினர்கள்...

வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org